பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 05 புதன்கிழமை 23.11.2022 கதிர் 270

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட நான்காம் வருட மாணவர்களுக்கும் முதலாம் வருட மாணவர்களுக்கும் இடையே நிலவிய வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் நான்காம் வருட மாணவர்கள் முதலாம் வருட மாணவர்களை 2

# டிசெம்பர் 11 முதல் தீர்வுப் பேச்சு சகல தரப்பு பங்குபற்றுதலுடன்!



## ஜனாதிபதி ரணிலின் முன்னெடுப்பில் இன்று நாடாளுமன்றில் தீர்மானம்

கொழும்பு, நவம்பர் 23

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்களை தற்போதைய வரவு – செலவுத் திட்டம் முடிந்த கையோடு, அதை அடுத்து டிசம்பர் 11ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளின் பங்கு பற்றுதல்களுடன் விரைந்து நடத்தி முடிக்க இன்று நாடாளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபையில் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய சமயம் எழுந்த குறுக்கீடுகளை அடுத்து, இது தொடர்பில் ஆக்கபூர்வமான வாதப் பிரதிவாதங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்று தீர்மானம் எட்டப்பட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். 8

## இ.தொ.கா. முன்னாள் தலைவர் முத்து சிவலிங்கம் காலமானார்!



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முத்து சிவலிங்கம் இன்று (வயது - 79) காலமானார்.

மலையகத்தின் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான அவர், பிரதி அமைச்சராகவும் செயற்பட்டுள்ளார்.

அவர் கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், இன்று காலை நுவரெலியாவில் அவரது இல்லத்தில் காலமானார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது. அவரது இறுதி நிகழ்வு குறித்த தகவல் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போராட்டத்தினூடாக மற்றுமோர் ஆட்சி மாற்றத்துக்கு இடமளியேன்

### சபையில் ரணில் திட்டவட்டம்

இலங்கையில் போராட்டத்தின் ஊடாக மற்றுமோர் ஆட்சி மாற்றத்துக்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனியும் ஆட்சி மாற்றம் செய்வதற்காகப் போராட்டத்தில் யாரும் ஈடுபடுவார்களாயின், முப்படையினரைப் பயன்படுத்தி அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் 2

## பதவி ஆசை எனக்கு இல்லை



### தேசியப் பட்டியல் எம்.பி. விவகாரம் தொடர்பில் மனம் திறந்தார் மாவை

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் எம்.பியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா பெற்றுக்கொள்ள அன்று தொடக்கம் இன்று வரை கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று வெளியாகியிருந்த செய்திகள் தொடர்பில் அவர் 8

## சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டனர் மலையக மக்கள்




### முத்து சிவலிங்கத்தின் மறைவுக்கு இ.தொ.கா. செயலர் ஜீவன் இரங்கல்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் குடும்பம் ஒரு சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டது. முத்து சிவலிங்கத்தின் இழப்பு காங்கிரஸுக்கு மட்டுமல்ல மலையக மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். 2

## ரணிலுடன் இ.தொ.கா. நாளை பேச்சு

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலை நாளை வியாழக்கிழமை ஜனாதிபதியுடன் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் 2

## நாட்டை முடக்கும் சர்வதேச சக்திகள்




### தமது ஆட்சி கவிழவும் இதுதான் காரணம் என்கின்றார் மஹிந்த

நாட்டில் சர்வதேசத்தின் தலையீடுகள் தீவிரமடைந்துள்ளன. முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் செயற்படுகின்றன. 8

## வல்லைப் பாலத்தில் விழுந்த இளைஞர் முகத்தில் காயங்களுடன் சடலமாக மீட்பு





யாழ்ப்பாணம், அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வல்லைப் பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரேரியில் தவறி விழுந்து 2

## வடக்கைச் சேர்ந்த பத்து பேர் தமிழகத்தில் இன்று தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இன்று காலை 10 பேர் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் தொடர் பொருளாதார நெருக்கடி காரணமாக பலரும் தமிழகத்துக்குத் தப்பிச் செல்ல முனைகின்றனர். அந்தவகையில் இன்று காலையும் 10 பேர் தமிழகத்தின் 2

## சிறிதம்ம தேரருக்குப் பிணை

### வசந்த முதலிகே தொடர்ந்தும் விளக்கமறியலில்



அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். 2

## சாணக்கிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருளில் இருந்த மலையகத்துக்குத் தன்னுடைய அமைச்சின் ஊடாக மின்சாரத்தைப் பெற்று ஒளி தந்தவர் அமரர் முத்து சிவலிங்கம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூத்த தலைவரென சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா போற்றப்பட்டதன் பின் தற்போது மூத்த தலைவர் என்ற வரிசையில் முத்து சிவலிங்கம் ஐயாவும் இணைவார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றில் பல தசாப்த காலமாக தொழிற்சங்கம் மற்றும் அரசியல்வழிகாட்டியாக இருந்து இந்த மாபெரும் அமைப்பின் தலைவராகவும், போசகராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், மலையக மக்களின் பிரதி அமைச்சராகவும் பதவி வகித்து எம்மை வழிநடத்திய மூத்த தலைவரின் முத்து சிவலிங்கத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் ஐயா சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவுக்குப் பின் எனது தந்தை அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அரசியல் மற்றும் தொழிற்சங்க வழிகாட்டியாக இவர் இருந்தார். எனது தந்தையின் மறைவுக்கு பின் என்னையும் இவர் வழிநடத்தினார் என்பதை மறந்துவிட முடியாது. அன்னாரின் பிரிவால் துயர் கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இவரின் குடும்பத்தாருடன் துக்கத்தையும் பகிர்ந்துகொள்கின்றேன் – என்றுள்ளது.

## வடக்கைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனுஸ்கோடியைச் சென்றடைந்தனர். இவ்வாறு சென்றவர்களில் 5 ஆண்களும், 2 பெண்களும், 3 சிறுவர்களும் அடங்குகின்றார். மேற்படி 10 பேரில் 9 பேர் வவுனியா மாவட்டத்தையும், ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது,

## ரணிலுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மலையக அரசியல் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, அக்கரப்பத்தன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு சம்பந்தப்பட்ட கம்பனி உரிய தீர்வை வழங்கத் தவறுமானால் நுவரெலியா மாவட்டத்துக்கும் அந்தப் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ஒரு இலங்கையராக வரவு – செலவுத் திட்டத்தை வரவேற்கும் அதேவேளை, மலையகத்துக்கு அதில் எதுவுமே வழங்கப்படாததால் மலையகத் தமிழன் என்ற வகையில் கவலையடைவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## யாழ்.பல்கலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ பீடத்தின் முன்பாக அமைந்துள்ள உணவகமொன்றில் வைத்துத் தாக்கியுள்ளனர்.

முதலாம் வருட மாணவன் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரியிடமும் முறையிடப்பட்டுள்ளது.

## போராட்டத்தினூடாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. இது வன்முறை செயலாகும். அவ்வாறு தீ வைப்பதற்கு யார் அவர்களுக்கு அதிகாரம் வழங்கினார்கள்?

தீ வைத்தவர்களின் பின்னால் யார் செயற்பட்டார்கள் என்பதைக் கண்டறிய விசேட செயலணி ஒன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தல் முறைமையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியம். விருப்பு வாக்களிப்பு முறை இருக்கும் வரையில் ஊழல் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

தற்போது என்னைக் ஹிட்லர் என விமர்சிக்கின்றனர். பரவாயில்லை, ஆனால் அனுமதி பெற்று போராட்டம் நடத்துங்கள், அதற்குத் தடையில்லை. போராட்டம் மூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமில்லை. கடுமையாகச் சட்டம் அமுல்படுத்தப்படும்.

பஸில்ராஜபக்ச இரட்டைக்குடியுரிமை உடையவர் என விமர்சிக்கின்றனர். பஸிலைப்போல முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னமும் இரட்டைக் குடியுரிமை உடையவர்தான் – என்றார்.

## வல்லைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போன நிலையில், இன்று முகத்தில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர், கலைமதி கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன் திலக்ஸன் (வயது 19) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரும் அவரது நண்பர்கள் சிலரும் இணைந்து வல்லைப் பாலத்தில் நேற்று மாலை வேளையில் தூண்டில் போட்டு மீன் பிடியில் ஈடுபட்டனர்.

அதன்போது இளைஞர் பாலத்தில் இருந்து நீரேரிக்குள் தவறி விழுந்து காணாமல் போன நிலையில் அவரைத் தேடும் பணியில் அச்சுவேலிப் பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டனர்.

இந்நிலையில், இன்று கடற்படையின் சுழியோடிகளால் இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சிறிதம்ம......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரகாரம், கடந்த ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த, சிறிதம்ம தேரர் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே ஆகியோர் இம்மாதம் 17 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதிவான் டீ.என்.எல். மஹவத்த முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

அதன்போது, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கப்பெறும் வரையில் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தின் அடிப்படையில் சிறிதம்ம தேரருக்கு இன்று பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிணை நிபந்தனைகள் பூர்த்தியானதன் பின்னர் அவர் விடுவிக்கப்படவுள்ளார். சிறிதம்ம தேரர் சார்பில் சட்டத்தரணி பஸீர் மொஹமட் முன்னிலையாகியிருந்தார்.

எவ்வாறாயினும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப்பெறும் வரையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேடித்தனமான தேர்தல் ஆணையம்

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தில் எது நடக்குமென எதிர்பார்க்கப்பட்டதோ அதுவே நடக்கிறது.**

**மக்கள் தீர்ப்பு ஒன்றை – தேர்தல் ஒன்றை – எதிர்கொள்ளத் திராணி இல்லாத இந்த அரசுத் தலைமை அடுத்த நான்கு மாத காலத்துக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் முடக்குவதற்கு எந்த வழி வகையையும் நாடும் என்று எதிர்வு கூறப்பட்ட நிலையில், அதற்கான தந்திரோபாயங்களே கட்டவிழ்கின்றன.**

**மாகாண சபை தேர்தல்கள் கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக நடத்தப்படவே இல்லை. அவற்றை நடத்தாமல் முடக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் 'நல்லாட்சி(?) அரசு' என்ன வழிவகைகளை நாடியதோ அதுவே இப்போதும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முடக்குவதற்காகவும் கனகச்சிதமாகக் கட்டவிழ்கின்றன. நாடு அதனைப் பார்த்து ஏமாளியாக வாளாவிருக்கின்றமைதான் பேரபத்தம்.**

**மாகாண சபைத் தேர்தல் முறையில் இளைஞர், யுவதிகள் மற்றும் மகளிருக்குப் போதிய இடமளிக்கும் விதத்தில் மாகாண சபைகள் தேர்தல் சட்டங்களை மாற்றப் போகிறோம், அதற்காக இருக்கும் சட்டத்தை ரத்து செய்கிறோம் என்று ஒரு தெரிவித்து, ஒரு சட்டத்தை நிறைவேற்றினர். ஆனால் புதிய சட்டம் வரவும் இல்லை, தேர்தல்கள் நடத்தப்படவும் இல்லை.**

**அதே பாணிதான் இப்போது உள்ளூராட்சித் தேர்தல் விடயத்திலும். உள்ளூராட்சி மன்றங்களின் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கின்றோம், அதற்கான புதுச் சட்டம் வருகின்றது என்ற நேற்று முன்தினம் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு அதன் பிரதிபலிப்புதான்.**

**இருக்கும் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் மார்ச் 20 இல் முடிகின்றது. சட்டப்படி அதற்கு முன்னர் புதிய சபைகள் தேர்வாகி இருக்க வேண்டும். ஜனவரி 7ஆம் திகதிக்கு பிந்தாமல் தேர்தலுக்கான அறிவிப்பைத் தேர்தல் ஆணையம் விடுத்தால் மட்டுமே உரிய காலத்தில் அதை நடத்தி முடிக்க முடியும்.**

**ஆனால் அந்த ஜனவரி 7ஆம் திகதிக்கு முன்னர் புதிய சட்டம் நடைமுறைக்கு வர வாய்ப்பே இல்லை. இப்போது வரவு – செலவுத் திட்ட விவாதத்திற்காக நாடாளுமன்ற தினசரி கூடுகின்றது. டிசம்பர் 8ஆம் திகதியுடன் அது ஒத்திவைக்கப்பட்டால் இனி ஜனவரியில்தான் அந்தத் தொடர். அதற்கிடையில் நாடாளுமன்றம் கூடவோ, உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவோ வாய்ப்பே இல்லை.**

**ஆக, உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தின் பின்தான் இந்தத் தேர்தல் என்றால் அது இப்போதைக்கு இல்லை என்பதுதான் அர்த்தம்; மாகாண சபை நிலைமைதான் உள்ளூராட்சி சபைகளுக்கும் என்பது உறுதி.**

**உரிய தேர்தலை அறிவித்து நடத்தும் சுய அதிகாரம் இருந்தும், அதைச் செய்யத் தவறும் பேடித்தனமான தேர்தல் ஆணையமே இவ்விடயத்தில் மக்களின் வாக்குரிமை பறிபோகின்றமைக்குப் பிரதான காரணி. ஜனநாயகத்தின் கோடரிக் காம்பாக சுயாதீன தேர்தல் ஆணையமே மாறுவது விந்தையிலும் விந்தை.**

# பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி ஒழியக் கூடாது!

## இதுவே எமது குணம் என மஹிந்த பெருமிதம்



பிரச்சினைகளைக் கண்டு அஞ்சி ஒழிவது தங்களின் கொள்கை கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிதியமைச்சர் என்ற வகையில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல யோசனைகளை ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்க முன்வைத்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

சர்வதேச ரீதியாக எழுந்துள்ள சவால்களை வெற்றிகொள்ள நாம் இடைக்கால மற்றும் நீண்ட கால பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குற்றங்களை மட்டும் சுமத்திக்கொண்டிருக்காமல் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்க வேண்டும் என்றும் அதுவே தமது நிலைப்பாடு என்றும் குறிப்பிட்டார்.குமேலும் எவ்வாறான சிக்கல்களை எதிர்க்கொண்டாலும் நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வது எமது கொள்கை கிடையாது என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 70 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மன்னார் – வெள்ளாங்குளம் பகுதியில் மீட்பு!



மன்னார் – வெள்ளாங்குளம் பகுதியில் 7 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்– யாழ். பிரதான வீதி வெள்ளங்குளம் வீதித் தடுப்பில் சந்தேகத்துக்கிடமான லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டதில் அதில் 24 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா அடங்கிய 12 பொதிகள் மீட்கப்பட்டன.

இதன் போது வவுனியாவை சேர்ந்த 37 மற்றும் 45 வயதான இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய சந்தேகநபர்களையும் லொறியையும் இலுப்பைக்கடவை பொலிஸார் கைபற்றியதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் தயாரித்த ஆவணப்படங்கள் வெளியீடு!



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட்டன.

இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பதினான்கு ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலை சொல்லும் 'கடல்விளை அமுதம்', மலையகக் கிராமமொன்றின் விளையாட்டு மைதானத் தேவையைப் பற்றிப் பேசும் 'மைதானம்', நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசும் 'வாழைக்குலைச் சங்கம்', சூழல் மாசடைவதை ஏதோ ஒரு வகையில் குறைக்கும் வண்ணம் பழைமையை வழமைக்கு கொண்டுவரும் சிறிய முயற்சி பற்றிப் பேசும் 'மிதியுந்து', சிற்பக்கலையில் அருகி வரும் உளிப்பயன்பாடு மற்றும் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பயன்பாடு பற்றிப் பேசும் 'உளி தொடாக்கலை', ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

அத்துடன், வழக்கொழிந்து போயிருக்கும் சூத்திரக் கிணறு நீர்ப்பாசன முறை பற்றிப் பேசும் 'அழிவடைந்து போன பழமை', ஆழக் கடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச் சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் 'செம்மலையின் கண்ணீர்', மரபு ரீதியான கால்நடை வளர்ப்பு மூலமான தற்கால தன்னிறைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வு பற்றிப் பேசும் 'வன்னியின் ஆவுடையூர்', நீடித்த வனையுடனான பலவர்ண 'பற்றிக்' உள்ளூர் உற்பத்தி பற்றிப் பேசும் 'வானவில்', நந்திக்கடல் மீன்பிடியின் தற்போதைய நிலை பற்றிப் பேசும் 'நந்திக்கடல் மீன்பிடி', மலையகப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்வியற் சிக்கல்களைச் சொல்லும் 'அம்மா', வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருந்து இன்று சிதைவடைந்திருக்கும் கீரிமலை வெளவால் புறாக்குகையின் கதைசொல்லும் 'மறைந்திருக்கும் தொன்மம்', மாற்றுத்திறனாளிக் கலைஞர் ஒருவரின் கலைத்துறைப் பயணம் பற்றிப் பேசும் 'இருளொளி', தமிழர்களின் பாரம்பரிய இயந்திரப் பொறிமுறை பற்றிப் பேசும் 'தூய மரச்செக்கு எண்ணெய்' ஆகிய ஆவணப்படங்களும் திரையிடப்பட்டன.

# வரலாறு காணா கடும் பனிப்பொழிவு நியூயோர்க்கில் அவசரகால நிலை!









வொஷிங்டன், நவ.23

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. நியூயோர்க் மாகாணத்தில் வரலாறு காணாத அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. மாகாணம் முழுவதும் பலத்த காற்றுடன் பனி கொட்டி வருகிறது.

அங்குள்ள எரி நகரில் முன் னெப்போதும் இல்லாத அளவுக்கு 24 மணி நேரத்தில் 180 செ.மீ. பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சாலைகள், வீடுகள், வாகனங்கள் பனிப்போர்வை போர்த்தி காட்சியளிக்கின்றன என்றும், குளிர் மேலும் மேலும் அதிகரித்து வருவதால் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீதிகளில் குவிந்துள்ள பனியை அப்புறப்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன. இதனிடையே கடுமையான பனிப்பொழிவை எதிர் கொண்டுள்ள நியூயோர்க் மாகாணத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

அங்கு பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதப்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜாவா நிலநடுக்கத்தில் 151 பேரைக் காணோம்

### உயிரிழப்பும் அதிகரிப்பு








மேற்கு ஜாவா, நவ.23

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவில் உள்ள சியாஞ்சூர் நகரில் 10 கி.மீ. ஆழத்தில் நேற்றுமுன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.6 ஆக பதிவாகியிருந்தது. இந்த நிலநடுக்கத்திற்கு பலியானவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகின்ற நிலையில், இதுவரை மொத்தம் 268 பேர் உயிரிழந்து உள்ளனர் என்றும் மேலும்

151 பேர் காணமல்ப் போயுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தில் பல கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன. இதில், பெருமளவில் குழந்தைகளே உயிரிழந்து உள்ளனர். அவர்களில் பலர் பள்ளி குழந்தைகள் என தெரிய வந்து உள்ளது. நிலநடுக்கம் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகர்த்தாவின் தெற்கு பகுதி நகரங்களிலும் உணரப்பட்டு உள்ளது. நிலநடுக்கத்தால் 2,200 வீடுகள் சேதமடைந்து உள்ளன என்றும் 5,300க்கும் கூடுதலான மக்கள் பாதுகாப்பு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் இந்தோனேசிய பேரிடர் மீட்புக் கழகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவில் வரலாறு காணாத உயர் வெப்பநிலை கடந்த மாதம்




பாரிஸ், நவ.23

ஐரோப்பிய கண்டம் முழுவதும் இந்த ஆண்டு கடந்த ஒக்டோபர் மாதத்தில் வரலாறு காணாத அளவு உயர் வெப்ப நிலை பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதற்கு முன்பு கடந்த 1991 மற் றும் 2020 ஆகிய ஆண்டுகளில் பதிவான சராசரி வெப்ப நிலையை விட இம்முறை 2 டிகிரி செல்சியஸ் அதிகம் என கோப்பர்நிகஸ் காலநிலை மாற்ற சேவை மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தெற்கு


ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகள் ஒக்டோபர் மாதத்தில் வறட்சியடைந்து காணப்பட்டன. அதே சமயம் மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் சில பகுதிகள் ஈரப்பதம் மிக்கனவாக இருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஐ.நா. உலக வானிலை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், புவி வெப்பமடைதல் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரை அதிக வெப்பநிலை பதிவாகி உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. வேகமான புவி வெப்பமடைதல் காரணமாக பனிப்பாறைகள் உருகி கடல்நீர் மட்டம் அதிகரிக்கலாம் எனவும், கடுமையான மழை மற்றும் வெப்ப அலைகள் போன்ற தீவிர வானிலை ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் எகிப்தில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா.வின் 27 ஆவது மாநாட்டில், பருவநிலை மாற்றத்திற்கு தீர்வு காண அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டெரெஸ் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் இடையே ஒரு வரலாற்று உடன்படிக்கை ஏற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை 180 வீதத்தால் அதிகரிப்பு!

## உயர் நீதிமன்ற மதுரைக்கிளை வேதனை தெரிவிப்பு


சென்னை, நவ. 23

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்து அதனை முற்றிலும் ஒழிக்க வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், தமிழ்நாட்டில் குழந்தை தொழிலாளர்கள் எண்ணிக்கை 180 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுவது வேதனை அளிக்கிறது என தெரிவித்துள்ளனர். மேலும், மத்திய, மாநில அரசுகள் குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் கூறியுள்ளனர்.

இந்தியா மட்டுமில்லாமல் உலகம் முழுவதும் குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த நீதிபதிகள், இது குறித்து மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல செயலர், மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறைச் செயலர், தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் செயலர் ஆகியோர் பதில் மனு அளிக்க உத்தரவிட்டுள்ளனர்.

# இந்தியாவால் தேடப்படுகின்றவர் கட்டாரில் கால்பந்து போட்டியில்

டெல்லி, நவ.23

மத வெறுப்புணர்வு பேச்சு, பணமோசடி வழக்கில் இந்தியாவால் தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்ட சாகிர் நாயக் என்கின்ற இஸ்லாமிய மத போதகர் இந்தியாவில் இருந்து தப்பியோடி மலேசியாவில் தஞ்சம் அடைத்தார். சாகிர் நாயக்கிற்கு மலேசியா நிரந்தரக் குடியுரிமை வழங்கியிருந்தது.

இதனிடையே, சாகிர் நாயக் கத்தார் நாட்டிற்கு சென்றுள்ளார். உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிகள் கத்தாரில் நடைபெற்றுவரும் நிலையில் சாகிர் நாயக்கை கத்தார் சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளது. கத்தாரில் சாகிர் நாயக் இஸ்லாமிய மத சொற்பொழிகளில் ஈடுபட உள்ளார் எனவும், விளையாட்டு சேனல்களில் இஸ்லாமிய மத சொற்பொழிகளை சாகிர் நாயக் நடத்த உள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவால் தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்டுள்ள சாகிர் நாயக் கத்தாருக்கு சிறப்பு விருந்தினராகச் சென்றிருப்பது தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கை குறித்து மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறுகையில், இந்த விவகாரத்தை இந் தியா கவனிக்கும். மேலும், இந்த விவகாரத்தை கவனத்தில் கொள்ளும். ஆனால், சாகிர் நாயக் மலேசிய குடிமகன். சாகிர் நாயக் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தியாவின் நிலைப்பாடு கடுமையாக எடுத்துரைக் கப்படும் – என்றார்.

# இந்திய – ஆஸி வர்த்தக ஒப்பந்தத்துக்கு அந்த நாட்டின நாடாளுமன்றம் ஒப்புதல்




புதுடெல்லி, நவ.23

இந்தியா – ஆஸ்திரேலியா இடையே வரலாற்று சிறப்பு மிக்க பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதம் கையெழுத்தான நிலையில், அந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவையாக இருந்தது. மேலும், இந்திய மத்திய அமைச்சகத்தால் இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தகம் மேற்கொள்வதற்கான இந்த ஒப்பந்தத்துக்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

இதனை அஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோணி அல்பானீஸ் டுவிட்டரில் தெரிவித்தார்.

இது குறித்து இந்திய மத்திய குவர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி பியூஷ் கோயல் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், இந்தியா – ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதில் மகிழ்ச்சி. நமது ஆழமான நட்பின் விளைவாக, இது எங்கள் வர்த்தக உறவுகளின் முழு திறனை அடைவதற்கும், பெரிய பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் வழி வகுக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவை வளர்ந்த நாடாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மோடி அழைப்பு



புதுடெல்லி, நவ.23

அடுத்த ஒன்றரை ஆண்டுகளில், 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்குமாறு அனைத்து மத்திய அரசு துறைகளையும் பிரதமர் மோடி கடந்த ஆனி மாதம் கேட்டுக்கொண்டமையைத் தொடர்ந்து, கடந்த ஒக்டோபர் மாதம், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 75 ஆயிரம் பேருக்கு பிரதமர் மோடி பணி நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இந்தநிலையில், மத்திய அரசின் ரோஜ்கார் மேளா (வேலை வாய்ப்பு கண்காட்சி) நேற்று நடைபெற்றது. அதில், காணொலிக் காட்சி மூலமாக பங்கேற்ற பிரதமர் மோடி சுமார் 71 ஆயிரம் பேருக்கு பணி நியமனஜ் கடிதங்களை வழங்கினார்.

இதன்போது, அவர்களிடையே உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் உலக வல்லுநர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர். விண்வெளித்துறையில் தனியார் பங்களிப்பால் இளைஞர்கள் பலன்களை பெறுகின்றனர். இந்தியாவில் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள்

உருவாக்கப்படுகின்றன. கொரோனாத் தொற்று மற்றும் போரால் புதிய வாய்ப்புகள் கிடைப்பதில் உலகம் முழுவதும் சுணக்கம் ஏற்பட்டது. ஆனால் இந்த காலம்தான் இந்தியா தனது பொருளாதார பலத்தை நிருபிப்பதற்கான பொன்னான காலம் என பொருளாதார அறிஞர்களும், நிபுணர்களும் தெரிவித்தனர். அமிர்த காலத்திற்குள் இந்தியா நுழைந்துள்ளது. இந்த நேரத்தில் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்ற அனைவரும் உறுதி ஏற்க வேண்டும். அந்த உறுதிமொழியை மெய்பிக்க நீங்கள் அனைவரும தான் 'சாரதிகளாக' செயல்பட வேண்டும். – என்று அவர் கூறியுள்ளார்.

# குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தின் முதலாண்டில் இன்று கவனவீர்ப்புப் பேரணி












(ஹஸ்பர்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி இயந்திர படகு பாதை கோர விபத்து ஏற்பட்டு இன்றுடன் ஒரு வருடமாகின்றது. கடந்த 2021.11.23 ஆம் திகதி ஏற்பட்ட இவ்விபத்தில் எட்டு அப்பாவி உயிர்கள் பலியாகின. இதில் ஐந்து மாணவர்களும் மூன்று பொது மக்களும் அடங்குவர்.

சம்பவத்தை ஒட்டி இன்று பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையினால் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று இடம் பெற்றது. இப் பேரணி பாடசாலை முன்றிலில் ஆரம்பித்து குறிஞ்சாக்கேணி பாலம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள், பொது மக்கள், கிண்ணியா பிரதேச செயலாளர் உட்பட வலயக்கல்வி பணிப்பாளர் என சுமார் ஐந்நூறுக் கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் சென்றவர்கள் பால நிர்மாண பணியினை துரிதகதியில் செய்து தருவதோடு இரு பகுதி மக்களினது போக்குவரத்தினை இலகுபடுத்தித் தருமாறும் வேண்டிக் கொண்டனர். அத்துடன் மேலும் அப்பாவி உயிர்களை பலி கொடுக்க நாங்கள் தயாரில்லை என்றும் அவ்வாறான சம்பவம் ஒன்று இனிமேலும் ஏற்படக் கூடாது என்றும் கவனவீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இக்கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றையும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனியிடம் அவர்கள் கையளித்தனர்.

இதே வேலை கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயிர் நீத்தவர்களுக்கான துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இவ் பிரார்த்தனையின் போது உயிர் நீத்தவர்களின் குடும்பங்கள்,உலமா சபையினர்,கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## காரைதீவில் வரம்பு பயிர்ச்செய்கை அதற்கான விதை வழங்கல் இன்று





(வி.ரி.சகாதேவராஜா)

விவசாயத்துக்கு மேலதிகமாக வயல்களில் உள்ள வரம்புகளில்உணவுப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள கமநல சேவைகள் திணைக்களம்நடவடிக்கைஎடுத்து வருகின்றது.

அந்த வகையில் காரைதீவு பிரதேசத்தில் வயல் வரம்புகளில் உணவுப்பயிர்ச்செய்கையினை முன்னெடுப்பதற்காக விவசாயிகளுக்கு பயிர் விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கமநல நிலைய அபிவிருத்தி உத்தியோத்தர் மார்க்கண்டு சிதம்பரநாதன் தலைமையில் இன்று புதன் கிழமை நடைபெற்றது.

வரம்புகளில் உணவுப்பயிர் செய்கையினை மேற்கொள்வதனூடாக தேசிய உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

இப் பயிர்செய்கையின் விதைகள் நடும் ஆரம்பகட்ட நிகழ்வானது காரைதீவு வளைந்த வட்டை கிழல் கண்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் , காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் கமநல நிலைய அபிவிருத்தி உத்தியோத்தர் மா.சிதம்பர நாதன், விவசாய திணைக்கள உயரதிகாரிகள் கலந்து கொண்டு விதைகளை வழங்கி வைத்தனர்.

## மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாஞ்சோலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயமுள்ள பொது இடங்களில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து ஒரே நேரத்தில் பாரிய சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

இதன் போது, அல் ஹிரா வித்தியாலயம், அல் மினா வித்தியாலயம், மாஞ்சோலை ஜும்ஆ பள்ளிவாயல் மையவாடி, மாஞ்சோலை ஆயுர்வேத வைத்தியசாலை வளாகம் என்பன துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவிற்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம். நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த சிரமதானப் பணியில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.என்.எம்.சாஜஹான் உள்ளிட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்குள் அத்துமீறிநுழைந்து ஆசிரியர் மீது தாக்கு!

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரான , துரையப்பா கௌரிபாலன் எனும் ஆசிரியரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை )இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

பாடசாலை மலசல கூடத்துக்குச் செல்வதாக சென்ற மாணவன் நீண்ட நேரமாகியும் வராததால், மாணவனைத் தேடி ஆசிரியர் சென்றுள்ளார்.

அங்கு மாணவன் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்டமையால் மாணவனை ஆசிரியர் விசாரித்த போது மாணவன் அங்கிருந்து தப்பி சென்று , தனது தந்தையாரை அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு வந்துள்ளான். பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த மாணவனின் தந்தை , ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த மேற்படி ஆசிரியர் மீது சரமாரியாகத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த ஆசிரியரை சக ஆசிரியர் அங்கிருந்து மீட்டு , வைத்திய சாலையில் சேர்த்துள்ளார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை சில தரப்பினர் இனங்களுக்கு இடையிலான முறுகல் நிலையாகக் காண்பிக்க முயற்சித்து வருகின்றனர் எனவும் , அதனால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## செம்மணி இந்து மயானத்தை நவீனப்படுத்த அனைவரது ஒத்துழைப்புகளும் தேவையாம்!

### மயான அபிவிருத்திச் சபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,நல்லூர்,கோப்பாய் என மூன்று பிரதேசசெயலக பிரிவுகளுக்கு உட்பட்ட நான்காயிரம் வரையிலான பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள செம்மணி இந்து மயானத்தை நவீனமயப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செம்மணி இந்து மயானத்தை துப்பரவு செய்யும் பணியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மயான அபிவிருத்தி சபையினர் ஈடுபட்டனர்.

மேற்படி துப்புரவுப் பணியின் பின்னர் செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையின் தலைவர் சி.இலட்சுமிகாந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மேலும் அந்த கோரிக்கையில் –

யாழ்ப்பாணம் செம்மணி மயானத்தில் மின் தகன மேடை அமைக்கத் தீர்மானித்துள்ளோம். இதுவரை விறகையே எரிபொருளாகக் கொண்டு இந்த மயானம் இயங்கி வருகின்றது.

தற்போது சூழலைப் பாதுகாக்கும் பொருட்டும், மரங்களை வெட்டுவதை நிறுத்தும் பொருட்டும், விறகுகளின் நாளாந்த விலையேற்றத்தைக் கணக்கிலெடுத்தும் செம்மணி மயானத்தை மின் தகன மேடையை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இந்தச் செயற்றிட்டத்துக்கு இந்த மயானத்தை பயன்படுத்தும் பொதுமக்கள் தங்களாலான பங்களிப்பை வழங்க வேண்டும். மயானத்தைப் பயன்படுத்துபவர்கள் பொறுப்புடன் மயானத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். – என்றார்.

## கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 99 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணமோசடி செய்த பெண்!

### மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு – வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி 99 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவை மோசடி செய்தார் என நேற்று (செவ்வாய்க்கிழமை) மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்த இருவரிடம் கனடாவிற்கு அனுப்புவதாகக் கூறி பொறப்பட்ட 55 லட்சம் மற்றும் 44 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சித்திரை மாதம் இவ்வாறு பணம் பெறப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவில் பக்தி பூர்வமாக சத்ய சாயி ஜனனதின நிகழ்வு








(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு சத்யசாயி நிலையத்தின் ஏற்பாட்டில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97 ஆவது ஜனனதின விழா இன்று புதன்கிழமை நிலையத் தலைவர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் பக்திபூர்வமாக, வெகு விமரிசையாக இடம்பெற்றது.

ஜனன தின விழாவை முன்னிட்டு இன்று அதிகாலை 04.45 மணிமுதல் ஓங்காரம், சுப்ரபாதம், நவரத்தினமாலை என்பன பாடப்பட்டு காலை 7 மணியளவில் தேரோடும் வீதி வழியாக ஊர் வலம் இடம்பெற்றது. வீதி ஊர்வலத்தில் சாயி பக்தைகளான திருமதி பராபரம் துளசிரஞ்சன், திருமதி புவனேஸ்வரி ஜெயகணேஷ், செல்வி முகுர்த்தனா ரவீந்திரன் ஆகியோர் நகர சங்கீர்த்தன பஜனை பாடினர். ஊர்வலம் முடிவில் பிரசாந்திக் கொடியேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஓம் காரம், பஜனை, சிறப்புப் பேச்சு, சாயி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

# இறக்காமத்தில் காணிக் கச்சேரி





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரப் பிரச்சினைகளுக்கு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) இன் வழிகாட்டலில் துரிதகதியில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தொடரில், இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, இறக்காமம் – 04, வரிப்பத்தான்சேனை – 02 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் கோரி மக்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கான காணி கச்சேரி , காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிரின் தலைமையில் செவ்வாய்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. காணிப் பிரிவு உத்தியோகத்தர்களான குடியேற்றவியல் உத்தியோகத்தர் ஜி.பி.என். சுரஞ்சி ஸ்ரீதாச, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம். சில்மி மற்றும் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர்களான ஏ.சி.எம். சமீர், எம்.எல். கிரோர் ஜஹான் ஆகியோர் கலந்துகொண்டு குறித்த பொதுமக்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் தொடர்பான பிரச்சினைகளை நேரடியாக ஆராய்ந்தனர்.

## பதவி ஆசை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனந்திறந்து பதிலளித்துள்ளார்.

'Globe Tamil' இணையத்துக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சிக்குள் இருந்த தவறான நடவடிக்கைகள் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலில் எனக்கு வெற்றி பெற முடியாது போனது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை எனக்குப் பெற்றுக் கொடுக்க சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் என்னிடம் பேச்சு நடத்தினர். ஆனால், எமக்குப் பெண் பிரதிநிதித்துவம் இல்லை. அதனால் பெண் ஒருவருக்கு இந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன்.

தேர்தல் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை திருகோணமலையில் சென்று சந்தித்த போது கட்சியில் பெரும்பான்மையானவர்கள் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை எனக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

என்றாலும் இது தொடர்பில் முடிவெடுக்க மீண்டும் சம்பந்தனைச் சந்திக்கச் செல்வதற்கு முதல்நாள் கட்சியின் செயலாளரால் கையொப்பமிட்டு அம்பாறைக்குத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை வழங்க வேண்டுமென்ற அறிவிப்பு வெளியானது.

உண்மையில் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை அம்பாறைக்கு வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. என்றாலும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் அந்த முடிவு எடுக்கப்பட்டது தவறான ஒரு விடயமாகும்.

பதவிகளுக்காக நான் ஒருபோதும் ஆசைப்பட்டதும் இல்லை;அடிபணியவும் இல்லை; வாதாடவும் இல்லை. 11 தடவைகளுக்கு மேல் என்னை கைது செய்துள்ளனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் 7 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலும் இருந்துள்ளேன்.

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக என்னை நிறுத்த வேண்டுமென்று அனைவரும் ஓரணியில் இருந்த போதும் அந்தச் சந்தர்ப்பத்தைஎமது இனவிடுதலைக்காக நான் விட்டுக்கொடுத்திருந்தேன். ஆகவே, எனக்குப் பதவிகள் என்பது எப்போதும் முக்கியமாக இருந்ததில்லை. ஆனால், எனக்கு வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நான் எமது மக்களுக்காகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டுதான் இருக்கின்றேன் - என்றார்.

## நாட்டை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதானவிவாதத்தில்உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என குறிப்பிடுபவர்கள் குறுகிய நிலைக்குள் இருந்துக் கொண்டு செயற்படாமல் கடந்த காலங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு குறுகிய காலத்தில் அதிக வெளிநாட்டு கடன்களை நாடு தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு பெற்றுக்கொண்டது. பொருளாதாரப் பாதிப்புக்கு தற்போது தீர்வு காண ஆலோசனை குறிப்பிடுபவர்கள் நல்லாட்சி அரசில் முக்கியமான பதவிகளில் இருந்ததை மறந்து விட்டார்கள்.

வீரவசனம் பேசுபவர்களால் எவ்வித பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. எம்மால் வீரவசனம் மாத்திரம் பேசிக் கொண்டு இருக்க முடியாது. சவால்களைப்பொறுப்பேற்பது எமது கொள்கையாகும். சவால்களை கண்டு ஒருபோதும் அஞ்சி ஓடவில்லை.

தவறான தீர்மானங்கள் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்துவதால் பயன் ஏதும் கிடைக்கப் பெறாது. அரசின் நாளாந்த செயற்பாடுகளையும் நிறைவேற்ற அரசு கடன் பெறும் நிலை ஏற்பட்டது. பெற்றுக் கொண்ட கடன் அரசின் உறுதிப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, ஆட்சி மாற்றம் வரை கொண்டு சென்றது.

பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு மத்தியில் தேசிய வளங்களை விற்கும் கொள்கை எமக்கு கிடையாது. எதிர்வரும் காலங்களில் மக்கள் பல விடயங்களை அறிந்து கொள்வார்கள். நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதை தடுக்கும் தேசிய மற்றும் சர்வதேச சக்திகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. சமூகவலைத்தளங்களை பயன்படுத்துபவர்கள் இதனை நன்கு அறிவார்கள். அவர்களுக்கு வெட்கமில்லை, மீண்டும் எம்மை எவ்வாறு வீழ்த்துவது என்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளார்கள்.

அரசியல் நோக்கத்துக்காக முரண்பட்டுக் கொள்ளாமல் அரசு மாறும் போது மாற்றமடையாத அரச கொள்கையை செயற்படுத்துவது அவசியமாகும். விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் கொள்கையற்ற நாடு மாத்திரமே மிகுதியாகும்.

நாட்டில் சர்வதேசத்தின் தலையீடு தீவிரமடைந்துள்ளது. அவர்களின் நோக்கமே கடந்த மாதங்களில் செயற்படுத்தப்பட்டன. திட்டமிட்ட வகையில் பொருளாதாரம் வீழ்த்தப்பட்டது.

நாட்டில் கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலைக்கும், தற்போதைய நிலைக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு தரப்பினர் பொருளாதாரப் பாதிப்பை தீவிரப்படுத்தும் வகையில் செயற்படுகின்றார்கள் - என்றார்.

## டிசெம்பர் 11........

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கான ஒதுக்கீடு மீது குழு நிலை விவாதம் இன்று நடைபெற்றது. அதற்குப் பதில் அளிப்பதற்காக நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பிரசன்னமாகி இருந்தார்.அப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் உரையாற்றினார்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள், அதைத் தீர்க்காமல் நாடு மேலெழ முடியாது என்பவற்றையெல்லாம் அவர் விவரமாக விவரித்தார். எதிர்காலத்திற்கான தீர்வு காணப்படவும் வேண்டும், கடந்த காலத்தின் உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவும் வேண்டும் என்றார் சுமந்திரன்.

எதிர்காலத்தைப் பாதுகாப்பாக மாற்றிக்கொண்டுதான், கடந்த காலத்தின் விடயங்களைப் பார்க்க வேண்டும் என்ற தென்னாப்பிரிக்க அனுபவம் வலியுறுத்துவதையும் அவர் குறிப்பிட்டார்.

தீர்வுப் பேச்சை ஆரம்பித்து, விரைந்து முடிப்போம் என்று கடந்த சில நாள்களாக ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார், அந்த முயற்சிக்குக் குந்தகமாக அமையக்கூடாது என்பதற்காகத்தான் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது இல்லை என்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தது என்று அவர் விளங்கப்படுத்தினார்.

இனப் பிரச்சினைக்காகப் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு காலகட்டங்களில் எடுக்கப்பட்டன என்று அவற்றை விலாவாரியாக எடுத்துரைத்த சுமந்திரன், ஓர் இணக்கமான இறுதித் தீர்வை எட்டுவது அவ்வளவு கஷ்டம் இல்லை என்றார். சமஷ்டித் தீர்வை இந்த நாட்டுக்கு முதலில் பிரேரித்தவர்கள் சிங்களத் தலைவர்கள் என்று குறிப்பிட்டு அவை பற்றியும் அவர் விவரமாக கூறினார்.

ஜனாதிபதி விரும்பினால் இந்த வரவு செலவுத் திட்டம் டிசம்பர் 8ஆம் திகதி முடிந்த கையோடு, ஒரேடியாக தொடர்ந்து இருந்து பேசி இந்த டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றார் சுமந்திரன்.

சுகந்திரனின் பேச்சை அடுத்து பதில் அளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரவு - செலவுத் திட்டம் முடிந்ததும் இந்த விடயத்தை பேசி முடிவெடுக்க முதலில் கூட்டமைப்பு தயாராக என்று சுமந்திரனைப் பார்த்துக் கேட்டார்.

'ஆம். தொடர்ந்து பேசி டிசம்பர் 31 க்குள் முடிவெடுப்போம். நாம் தயார்' -என்று சுமந்திரன் அறிவித்தார்.

அடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாரா என்று அக்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி. அப்போது சபையில் சஜித் பிரேமதாஸா இருக்கவில்லை.

"நாங்கள் அதிகாரப் பகிர்வுக்கு எப்போதும் தயார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே 13 ஐ ஒழிக்க முயன்றார். '13 பிளஸ்' என்று சொல்லிய மஹிந்த ராஜபக்ஷ இங்கு இருக்கிறார். அவரைக் கேளுங்கள். அவர் தயாரா என்பதைக் கூறட்டும். அதிகாரப் பகிர்வுக்கு எப்போதும் எதிர்ப்புக் காட்டி வந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தனா இப்போது என்ன சொல்ல போகிறார்?" - என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

"13க்கு எதிராக நான் எப்போதும் செயல்பட்டவன் அல்லன்" - என்று நிலைமையைத் தெளிவுபடுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மீண்டும் மீண்டும் மஹிந்தவின் கருத்து கேட்கப்பட்டது. அதை அடுத்து அவர் எழுந்து, தாம் பதின்மூன்று பிளஸுக்கு தயார் என்றார்.

இதை அடுத்து 'வரும் எட்டாம் திகதி வரவு - செலவுத் திட்டம் முடிந்ததும் அடுத்து ஒரு நாள் நாடாளுமன்றம் இருக்கும், அது முடிந்ததும், டிசம்பர் 11ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் எல்லோரும் ஒன்று கூடி தேசிய பிரச்சனைக்கு தீர்வு காணும் முடிவை எடுப்போம், எல்லோரும் இணங்கிகின்றீர்கள்தானே!' - என்று ஜனாதிபதி கேட்டார்.

மனோ கணேசன், ரவூப் ஹக்கிம், பிரதமர் தினேஷ் குணவர்த்தனா எல்லோரும் அதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

அதைத் தமது முடிவாக ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2022 இல் வெளியிடப்பெற்றது.